# BSNL ஊழியர் சங்கம்

# தமிழ் மாநிலம்

# கூட்டு நடவடிக்கைக் குழு அறைகூவல்

## மாவட்ட அளவில் பேரணி- 08.12.2011

## நாடு தழுவிய வேலை நிறுத்தம்–15.12.2011

**கோரிக்கைகள்:**

1) விருப்ப ஓய்வு திட்டம் கூடாது.

2) BSNLல் இணைந்துள்ள அதிகாரிகளிடம் பொறுப்புகளை ஒப்படைத்து விட்டு BSNLக்கு விருப்பம் தெரிவிக்காத ITS அதிகாரிகளை DOTக்கு அனுப்ப வேண்டும்.

3) போனஸை(PLI) உடனடியாக வழங்க வேண்டும்.

4) மருத்துவப்படி, விடுப்பை காசாக்குதல் மற்றும் LTC ஆகியவற்றை உடனடியாக மீண்டும் அமுல்படுத்து.

5) 78.2% பஞ்சப்படியை இணைத்து ஊதிய நிர்ணயம் செய்.

6) GSM, ப்ராட்பேண்ட் மோடம்கள், கேபிள்கள், Trans SMS, MLLN உள்ளிட்ட கருவிகளை உடனடியாக வழங்க வேண்டும்; முக்கியமான வியாபார திட்டங்களான ERP, NGN மற்றும் Transmission NMS ஆகிய திட்டங்களை உடனடியாக அமுல்படுத்து.

7) அரசின் கொள்கை தொடர்பான பிரச்சனைகள்:

அ) கொள்கை உறுதிமொழிகளின் அடிப்படையில் நஷ்டம் ஏற்படுத்தும் கிராமப்புற சேவைகளுக்கு நஷ்ட ஈடு வழங்கு.

ஆ) ஊதிய விகிதத்தின் உயர்ந்த பட்ச அளவில் என்றில்லாமல் உண்மையான ஊதியத்தின் அடிப்படையில் ஓய்வூதிய பங்கை DOTக்கு செலுத்து.

இ) ஏற்கனவே BSNLஆல் திருப்பித் தரப்பட்ட தரமற்ற BWA ஸ்பெக்ட்ரத்திற்கு BSNL செலுத்திய 8,313கோடி ரூபாய்களை திருப்பித் தர வேண்டும்.

ஈ) 3G ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு பெறாமல் 3G சேவையை சட்டத்திற்கு புறம்பாக கொடுத்துவரும் தனியார் நிறுவனங்களின் உரிமங்களை உடனடியாக ரத்து செய்ய வேண்டும்.

உ) போதுமான, பொறுத்தமான முறையில் ADC கட்டணங்கள் கணக்கிடப்பட்டு BSNLக்கு வழங்க வேண்டும்.

ஊ) கார்ப்பரேஷன் ஆக மாற்றும் போது உறுதியளித்தபடி உரிமக் கட்டணங்களை BSNLக்கு திரும்ப வழங்க வேண்டும்.

எ) உத்தேச கடன் என்று சொல்லி BSNLஇடம் இருந்து DOT பெற்றுள்ள 7,000 கோடி ரூபாய்களை வட்டியுடன் திருப்பித் தர வேண்டும்.

ஏ) தொலைத் தொடர்பு ஆலோசனைக் குழு(TAC)க்களை ரத்து செய்ய வேண்டும்.